**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.STC.1050/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | கார்த்திகா | Prosecution | |
| Father Name | க/பெ.சிதம்பரநாதன் | Defence | DW-1- Chief |
| Village | சீர்காழி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 57/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**<u>12.11.2025.</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**எதிரி தரப்பில் முதல் விசாரணை**

என் பெயர் கார்த்திகா என்றால் சரிதான். நான் எந்த பள்ளியில் ஆசிரியையாக உள்ளேன் என்றால் சீர்காழி தெற்கு வீதியில் உள்ள SMH Midle பள்ளியில் உதவி ஆசிரியையாக பணிபுரித்து வருகிறேன். மனுதாரர் ரவிச்சந்திரன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறார். நான் தடாளன் பெருமாள் கோயில் அ ருகில் 2022 ல் குடியிருந்தேன்.அப்போது தான் நான் வாதியிடம் ரூ.2 லட்சம் தொகை 10 பைசா வட்டிக்கு கடனாக வாங்கினேன். நான் அந்த கடனுக்கு 1 வருடம் மாதமாதம் ரூ.20 ஆயிரம் வட்டி செலுத்தினேன். நான் அந்த கடன் பெற்ற போது வெற்று காசோலை மற்றும் புரோ நோட் ஆகியவற்றை வெறும் கையொப்பம் மட்டும் செய்து புகார் தாரிடம் கொடுத்திருந்தேன்.

என்னிடம் பணம் கொடுக்கும் போது வாதி முதல் மாத வட்டியை பிடித்தம் செய்து கொண்டு ரூ.1லட்சத்து 80 ஆயிரம் மட்டுமே கொடுத்தார். அதன் பிறகு நான் 2023 ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் அவருக்கு செலுத்த வேண்டிய பணத்தை வட்டியோடு சேர்த்து ரூ. 2 லட்சத்து 20 ஆயிரமாக அவருக்கு செலுத்திவிட்டேன். அந்த சமயத்தில் நான் என்னுடைய PFகணக்கின் மீது கடன் பெற்று அந்த பணத்தை செலுத்தினேன். அவ்வாறு கடனை முடித்த பிறகு எனது காசோலை மற்றம் புரோநோட்டை திரும்ப கேட்டதற்கு வாதி இழுத்தடித்து வந்தார். அதன் பிறகு தான் எனக்கு இந்த நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது.

நான் வாதியிடம் கடன் வாங்கியது எனது மகன் அருண் மற்றும் எனது தங்கை விஜயலட்சுமி ஆகியோருக்கு தெரியும். வாதி எனது தங்கைக்கும் பணம் கொடுத்து

அதன் பிறகு அது பற்றி பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையம் வரை சென்று முடித்து வைக்கப்பட்டது. என் தங்கையும் ஆசிரியையாக பணியாற்றிவருகிறார். நடந்தது இது தான். நான் வாதியிடம் வாங்கிய பணத்தை திரும்ப கொடுத்துவிட்டேன். ஆனால் அவர் எனது காசோலை மற்றும் புரோ நோட்டை திரும்ப கொடுக்காமல் கூடுதல் வட்டி கேட்டு இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துவிட்டார்.

**வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**